30-9-1975

'நாராயணு' என்று சொன்னுல் நன்மை உண்டாகும்

புலவர் மாமணி முரு. பழ. இரத்தினம்செட்டியார் உரை

சிங்கப்பூர், செப். 29- உலகில் எவரொருவர் 'நாராயணு'எனும் நாமத்தை அனுதினமும் உச்சரித்து வழிபடுகின்ருரோ, அவர் தீமையான காரியங்களைச் செய்திருந்தாலும், அவர் எண்ணி செயல்படுகின்ற காரியங்கள் அனைத்தும் நன்மையாகவே முடியும் என்பதை ஆழ்வார்களின் புராணங்கள் நமக்கு உணர்த்துகின்றன என்று ஞாயிறன்று சௌத்பிரிட்ஜ் ரோடு மாரியம்மன் கோவிலில், 'நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்' என்னும் பொருள் பற்றிப் பேசிய புலவர் மாமணி திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்கள்.

திரு. செட்டியார் அவர்கள் மேலும் பேசியதாவது:

வைணவர்களுக்கு முதன்மையான நூல் ஆழ்வார்களின் புராணமே. ஆழ்வார்களின் வாக்கு வைணவர்களுக்கு மந்திர வாக்கு. சிவனை வழிபடுகின்ற சைவ சமயத்தவர்களும் பெருமாளை வழிபடுகின்ற வைணவர்களும் பக்தி மார்க்கத்தில் வழி ஒன்றே என்ருர் அவர்.

கடவுளுக்கு முன்னே தமிழ்

பெருமாள் கோவில்களில் பாசுரத்தை முன்னே பாடிச் சென்ற பின்னே வேதம் ஓத, பெருமாள் வலம் வருகின்றன காட்சியின் மூலம், அங்கே தமிழ் முன்னே செல்ல, பெருமாள் பின்னே வருகிருர். இதன் மூலம் தமிழின் ஆட்சி மேலோங்கி நிற்கிறது. என்பது தெளிவாகிறது என்ருர் அவர்.

விரத காலங்களில் பெண்கள்

விரதத்தை மேற்கொள்கின்ற காலங்களில் பெண்கள் நகை அணிவதில்லை, கண்களுக்கு மை இடுவதில்லை, கூந்தலில் மலர் சூடுவதில்லை. நெய் உண்பதில்லை, பால் உண்பதில்லை என்ற விதி முறைகளை வகுத்துக் கொண்டுள்ளார்கள். பால் அருந்துதல் என்று கூறுவது வழக்கம். ஆனல் இங்கே பால் உண்பதில்லை என்று குறிப்புகள் தெரிவிக்கின்றன. காரணம் என்ன ஆயர்பாடி இடையர் குலத்தில் வளர்ந்து வந்த கிருஷ்ணன், இடையர் குலத்தினரின் இல்லங்களிலுள்ள பால் முழுவதையும் பருகிவிடுவானும். அதனல் இடையர் குலத்தினர்க்கு பாலினை அருந்துதல் எனக்கூறுவதற்கும் உண்ணுதல் எனக் கூறுவதற்கும் பொருள் விளங்க முடியாமல் போய் விட்டதாகச் சொன்னுர் திரு. இரத்தினம் செட்டியார்.

ராமரின் உருவம்...

இராமாயணத்தில் சீதையைச் சந்நியாசி உருவில் சிறை எடுத்துச் செல்கிருன் இராவணன். சீதையை மீட்டுச் செல்ல ராமர் படை எடுத்து வருகிருர் என்பதை ஒற்றர்கள் மூலம் அறியும் இராவணன், தமது மந்திரிகளுடன் ஆலோசனை மேற்கொள்வதில் ஈடுபடுகிருன் அவர்களில் ஒருவர் சீதையைச் சிறை எடுக்க சந்நியாசி உருவில் செல்லாமல், ராமரின் உருவிலே சென்றிருந்தால் இந்தத் தொல்லை ஏற்பட்டிருக்காதே என்ற கருத்தினைச் சொன்னர். அதற்குப் பதிலளித்த இராவணன் ராமர் உருவத்தையும் மேற்கொண்டேன் ஆனல் ராமர் உருவில் இருக்கும் சமயம் பிற பெண்களைக் காணும் போது தாயாகவும், தங்கையாகவும், தெரிந்ததே தவிர, தீய எண்ணம், ஏற்படும் படியான கருத்து ஏற்படவில்லை. எனவே, யாசிக்கின்றன சந்நியாசி உருவில் சென்று சிறை எடுத்ததாகப் பதிலளிக்கிருர். இங்கே ராமரின் உருவத்திற்குள்ள சக்தியை உணரமுடியும், இதை வடமொழி காவியம் ஒன்று தெளிவுப் படுத்தியிருப்பதாக குறிப்பிட்டார் அவர்.

இரவில் வெளிச்சத்தில் உறங்குவதால் ஆயுட் காலம் அதிகரிக்கும் என்பதைதமது திருவருட்பாவில் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் கூறியிருப்பதையும் நினைவுபடுத்தினர் அவர். ஒழுக்கம் தவறியவர்களும் கடவுளை வணங்க முடியும் ஆண்டவனைவிட பிரார்த்தனைக்கு வலிமை அதிகம் என்பதை ஒரு சில கருத்துக்கள் மூலம் எடுத்துக் காட்டி விளக்கிருர் திரு. இரத்தினம் செட்டியார்.

இக்கூட்டம் இந்து அறக் கட்டளை ஆட்சிக் குழுவின் கல்வித் துணைக் குழு ஏற்பாட்டில் நடைபெற்றது.

சௌத்பிரிட்ஜ் ரோடு மாரியம்மன் கோவிலில் புலவர் மாமணி பேச்சு



கடந்த 28—9—75ந் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு 'நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்' என்னும் பொருள் பற்றி மூவர் புலவர் மாமணி திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியார் உரையாற்றுவதையும். அவரது உரையை செவிமடுக்கும் அன்பர்களையும் முரசு படத்தில் இங்கே காணலாம். படம்: ரமேஷ்

பாகிஸ்தான் தாமஸ் கிண்ணக் குழுவை வலுப்படுத்த

7வது ஆசிய குத்துச் சண்டைப் போட்டி:

சிங்கப்பூருக்கு ஒரு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது

தோக்கியோ, செப். 29— நேற்று [illegible] நடந்த [illegible] ஆசிய குத்துச்சண்டை[illegible] போட்டியின் [illegible] போட்டியில் சிங்கப்பூர [illegible] தோல்வியுற்[illegible] யானைச் [illegible] அல்போன்[illegible] போட்டியில் வெற்றிபெற்ற தங்கப் பதக்கத்தைப் பெற்றார்.

இரண்டாவது [illegible] [illegible]

போட்டியில் ஜப்பான் 6ல் வெற்றிபெற்றது. தென் கொரியா மூன்றிலும் ஈரான், மங்கோலியா தலா ஒவ்வொன்றிலும் வெற்றி பெற்று தங்கப் பதக்கங்களைப் பெற்றன.

குழு போட்டியிலும் ஜப்பானுக்கே வெற்றி கிட்டியது. ஜப்பான் 23 புள்ளிகளும், தென் கொரியா 16 புள்ளிகளும் பெற்றன.

பதக்கங்கள் பெற்ற [illegible] நாடுகளின் விவரம் [illegible]:—

சிங்க[...]

செப். 30-[...]

காலை

6-00	நிகழ்ச்[...]
6-30	இசை
7-00	செய்தி[...]
7-10	அறிவி[...]
7-15	அன்ரு[...]
7-30	திரை [...]
8-00	செய்தி[...]
8-10	அறிவி[...]
8-15	மாண[...]
8-45	இசைய[...]
9-00	இந்தித்[...] தி[...]
9-30	மலையா[...]
10-00	தெலு[...] தி[...]
10-30	நேயர் [...]
11-30	குடும்ப[...]
11-45	நவீன [...]
12-00	திரைக்[...]
12-30	இந்தித்[...]

பிற்பகல்

1-00	நிகழ்ச்[...] இ[...]
1-30	தமிழில் மார்க்கெட் விலை[...]
1-40	வாழ்வில்[...]
2-00	குடும்ப[...]
2-30	காட்சிப[...]
3-00	திரையி[...]
3-30	திரை ந[...]
4-00	இந்தித்[...]
5-00	செய்திக[...]
5-05	தெலுங்[...] தி[...]
5-30	சிறுவர் [...]

மாலை

6-00	உள்ளங்[...]
6-30	தமிழில் மார்க்கெட் விலை[...]
6-40	பாமாலை[...]

இரவு

7-00	பயணிப்[...]
7-05	இசைத்[...]
7-15	நிலைத்[...]
7-30	மலர்க் [...]
7-45	அன்ருப[...]
8-00	மலர்க் [...]
8-15	கூடிப் [...]